

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.198/2015
தேதி. 17.8.2015

# அரசியல் நாகரீகமற்ற
# இளங்கோவன் பேச்சு
# <u>மிகவும் கண்டனத்திற்கு உரியது</u>!
# தமிழக மக்களிடம் அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும்!
# ச.ம.க. நிறுவனர் தலைவர் ஆர் சரத்குமார் எம்.எல்.ஏ கண்டனம்!

காங்கிரஸ் கட்சி சார்பில் இரண்டு தினங்களுக்கு முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் தரம் தாழ்ந்து பேசியது மிகவும் கண்டிக்கத்தக்கது.

இந்திய தேசத்தின் பிரதமரிடம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தமிழகத்தின் முக்கியமான பிரச்னைகளை தீர்த்து வைத்திட வேண்டும் என்று கோரிக்கை மனு அளித்த தருணத்தை நா கூசாமல் நாரச நடையில் பேசியது மிக மிக கேவலமான ஒன்றாகும்.

தன் குடும்ப பாரம்பரியத்தை மறந்து அல்லது தன்னிலை மறந்து அவர் பேசிய பேச்சுக்கள் அவர் அரசியல் வாழ்க்கையில் கலங்கம் நிறைந்த கருப்பு நாளாகும். அவர் செயல்களுக்கு தமிழக மக்களிடம் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்.

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்